## DEPOSITION OF WITNESS

### (Chapter XXIII Code of Criminal Procedure

## In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.

| | | |
|---|---|---|
| **Calendar** | : | **Case No.555/2014** |
| **Miscellaneous** | : | |
| **Summary Trial** | : | |
| **Maintenance** | : | |
| **Deposition of witness for prosecution** | : | **P.W.7.ரெங்கலட்சுமி** |
| **Husband's Name** | : | **ரவி** |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 17.07.2019**

மு.வி:

நான் எழுமலையில் வசித்து வருகிறேன். நான் எழுமலை அரசு பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வருகிறேன். அ.சா.1 என்னுடைய பக்கத்து வீட்டுக்காரர். எதிரியை எனக்கு தெரியும். 03.02.2014 ஆம் தேதி மதியம் நேரம் நான் பள்ளியிலிருந்து தன்னுடைய வீட்டிற்கு சாப்பிட வந்தேன். அப்போது அ.சா.1 அவருடைய தோழி எதிரி வந்திருப்பதாக என்னிடம் சொன்னார். பின்னர் நான் சாப்பிட்டுவிட்டு பள்ளிக்கு சென்று வேலையை முடித்து மீண்டும் 4 மணிக்கு வரும்போது அ.சா.1 அவருடைய மகளை குளிக்க வைத்துக்கொண்டிருந்தார். எதிரி அப்போது அவரது வீட்டில் இருந்ததாக சொன்னார். பின்னர் அரை மணி நேரம் கழித்து அ.சா.1 என்னை கூப்பிட்டார். செயின், கைசெயின், கம்மல் ஆகியவற்றை எதிரி அ.சா.1 12 ½ பவுன் நகைகளை எடுத்து சென்றுவிட்டதாக கூறினார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி:

நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளது போல் தான் போலீசார் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் எழுமலையில் உள்ள ஹரிஜன் துவக்க பள்ளியில் பணிபுரிந்து வருகிறேன். என் வீட்டிற்கும் பள்ளிக்கும் சுமார் 300 மீட்டர் இருக்கும். மதிய இடைவேலை 12.45 மணி அளவில் பள்ளி விடப்படும். பள்ளி இடைவேலை முடிந்து மதியம் 1.30 மணிக்கு பள்ளி மீண்டும் செயல்படும். நான் சம்பவ தினத்தன்று மதியம் 12.50 மணிக்கு வீட்டிற்கு வந்தேன். அப்போது வந்த சமயத்தில் தான் அ.சா.1 தன்னுடைய தோழி எதிரி வந்திருப்பதாக கூறினார். அப்போது எதிரியை நான் பார்த்தேன். அப்போது எதிரி வீட்டிற்குள்

சாப்பிட்டுக்கொண்டிருந்தார். நான் திரும்ப 1.30 மணிக்கு பள்ளிக்கு சென்றேன். நான் திரும்ப 4.15 மணிக்கு வந்தபோது எதிரி வீட்டில் இருப்பதாக அ.சா.1 கூறினார். அதன்பிறகு சுமார் 20 நிமிடம் கழித்து நகை காணாமல் போனதாக அ.சா.1 கூறினார். அ.சா.1 என்ன என்ன நகைகள் வைத்திருந்தார் என அவர் சொல்லி தான் தெரியும் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். உடனே காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் சொன்ன தேதியில் மதியம் வீட்டிற்கு வரவில்லை என்றும் அன்றையதினம் நான் எதிரியை பார்க்கவில்லை என்றும் அ.சா.1ன் வீட்டிற்கு அருகில் வசிப்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி:

இல்லை.

## DEPOSITION OF WITNESS

### (Chapter XXIII Code of Criminal Procedure

## In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.

| | |
|---|---|
| **Calendar** | : **Case No.555/2014** |
| **Miscellaneous** | : |
| **Summary Trial** | : |
| **Maintenance** | : |
| **Deposition of witness for prosecution** | : **P.W.8.செல்வி** |
| **Husband's Name** | : **பரமசிவம்** |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 17.07.2019**

மு.வி:

நான் எழுமலையில் வசித்து வருகிறேன். நான் வீட்டில் தான் இருக்கிறேன். அ.சா.1 என்னுடைய பக்கத்து வீட்டுக்காரர். எதிரியை எனக்கு தெரியாது. அ.சா.1ன் வீடு பக்கத்து வீடு என்பதாலும் அவரது வீட்டில் சின்னப்பிள்ளை இருப்பதாலும் எனக்கு அவரோடு பழக்கம் இருந்தது. 5 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் அ.சா.1யை நான் உறவினர்கள் யாரும் வந்திருக்கிறார்களா என்று கேட்டதற்கு அவருடைய தோழி வசந்தி வந்திருப்பதாகவும் சொன்னார். அ.சா.1ன் வீட்டில் அப்போது வசந்தி இருந்தார். எதிரி அ.சா.1ன் வீட்டிலிருந்து செல்லும்போது நான் பார்த்தேன். அப்போது 4.30 மணி இருக்கும். 15 நிமிடத்தில் அ.சா.1 அவருடைய வீட்டில் அழுதுகொண்டிருந்தார். என்னவென்று விசாரித்ததற்கு செயின் மோதிரம் ஆகியவற்றை காணவில்லை என்று சொன்னார். ஆனால் எதிரி தான் அப்போது வீட்டிலிருந்து சென்றார் என்று சொல்லி அழுதார். போலிசார் என்னை விசாரித்தார்கள். என்ன என்ன நகைகள் எவ்வளவு விபரம் என்பது எனக்கு தெரியாது.

கு.வி:

என்னுடைய வீடு அ.சா.1ன் வீட்டின் கிழக்கே இரண்டு வீடு தள்ளியுள்ளது. எழுமலையிலிருந்து உசிலம்பட்டி அரை மணி நேரத்திற்கு ஒரு முறை பேருந்து உள்ளது என்றால் சரிதான். அ.சா.1ன் தோழி அ.சா.1ன் ஊர்க்காரர் என கூறினார். அ.சா.1ன் வீட்டிலிருந்து பேருந்து நிறுத்தத்திற்கு 5 நிமிடத்தில் வந்துவிடலாம். காணாமல் போனவுடன் தேடிப்பார்த்தாரா என்றால் பார்த்தார். நான் உடன் சென்றேனா என்றால் இல்லை. அ.சா.1ன் வீட்டின் அருகே நான் வசித்து வரும் காரணத்தினால் எதிரியை அ.சா.1ன் வீட்டில் பார்த்தேன்

என அ.சா.1க்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் வீட்டிற்கு மேற்குபுறம் செல்லம்மாள் வீடுவுள்ளது.

ம.வி:

இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

## In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.

| | |
|---|---|
| **Calendar** | : **Case No.555/2014** |
| **Miscellaneous** | : |
| **Summary Trial** | : |
| **Maintenance** | : |
| **Deposition of witness for prosecution** | : **P.W.9.நித்யா** |
| **Husband's Name** | : **முத்துமாணிக்கம்** |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 17.07.2019**

மு.வி:

நான் எழுமலையில் வசித்து வருகிறேன். நான் வீட்டில் தான் இருக்கிறேன். அ.சா.1 என்னுடைய பக்கத்து வீட்டுக்காரர். 03.02.2014 ஆம் தேதி அ.சா.1ன் அவருடைய சொந்தக்காரர் வசந்தி வந்திருப்பதாக என்னிடம் சொன்னார். வசந்தி வரும்போதும் நான் அவரை பார்த்தேன். மதியம் 1.30 மணிக்கு வீட்டில் உட்கார்ந்து வசந்திக்கு அ.சா.1 சாப்பாடு பறிமரிக்கொண்டிருந்தார். நான் அதைப்பார்த்தேன். பின்னர் நான் என் வீட்டிற்கு சென்றுவிட்டேன். மாலை சுமார் 4 மணிக்கு வந்து அ.சா.1 என்னை அழைத்தார். ரெங்கலட்சுமியின் கணவர் ரவி ஓடிப்போய் விபரம் கேட்டவுடன் அ.சா.1ன் செயின், கம்மல், பிரேஸ்லெட் ஆகிய நகைகள் 12 ½ பவன் நகைகள் காணாமல் போனதாக அ.சா.1 சொன்னார். அப்போது எதிரி அங்கு இல்லை. தனிதனியாக எவ்வளவு நகைகள் என்ற விபரம் தெரியவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி:

அ.சா.7ன் வீட்டில் கீழ் பகுதியில் நான் குடியிருந்து வருகிறேன். அந்த வீட்டில் நான் வசித்து வருகிறேன் என்று காட்டுவதற்கு போலீசார் விசாரணையின் போது வாடகை ஒப்பந்தம் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் அ.சா.1 உடன் சென்று புகார் எதுவும் கொடுக்கவில்லை. போலீசார் சம்பவம் நடைபெற்ற தினத்திலும் அதற்கு மறுநாளும் விசாரித்தார்கள். அ.சா.1ன் வீட்டின் அருகே நான் வசிக்கவில்லை என்றும்

அ.சா.1ன் வீட்டில் நான் எதிரியை பார்க்கவில்லை என்றும் அ.சா.1 எங்கள் ஊரைச்சேர்ந்தவர் என்ற காரணத்தினால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி:

இல்லை.